


**27.03.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. 5-ஜி அலைக்கற்றை சந்தையில் உலகின் 2-வது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. இலங்கை சிறையில் உள்ள இந்திய மீனவர்களில் பெரும்பாலானோர் ஏற்கனவே கைது நடவடிக்கைகளை சந்தித்தவர்கள் என்பதால் அவர்களை விடுவிப்பது சவாலாக உள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. வக்.்.ப் சட்டத்திருத்த மசோதாவை முழுமையாக திரும்பப்பெற வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தும் தனித்தீர்மானம் சட்டப்பேரவையில் இன்று ஒருமனதாக நிறைவேறியது.

4. தமிழக சட்டப்பேரவையில் இளைஞர்நலன் விளையாட்டுத் துறை மானிய கோரிக்கைக்கான கொள்கை விளக்க குறிப்பை துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் இன்று தாக்கல் செய்தார்.

5. மும்பையில் நடைபெறும் இந்தியன் ஓப்பன் ஸ்குவாஷ் மகளிர் அரையிறுதியில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா - அனாஹத் சிங்கை இன்று எதிர்கொள்கிறார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖

<u>அஷ்வினி வைஷ்ணவ்</u>

5-ஜி அலைக்கற்றை சந்தையில் உலகின் 2-வது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் இன்று பேசியஅவர், அரசின் உயர் முன்னுரிமையால் பல்வேறு பிரிவுகள், வளர்ச்சிக்கான மாற்றங்களை கண்டுவருவதாக எடுத்துரைத்தார்.

இத்துறைகளில் 11 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

1.6 பில்லியன் டன் சரக்குகளுடன் 2-வது பெரிய சரக்கு கையாளும் திறனுடன் நம் நாட்டின் ரயில்வே துறை முன்னேறி வருவதாக கூறியஅவர், துறைமுகங்களும் மிகப்பெரிய வளர்ச்சியை சந்தித்து வருவதாக எடுத்துரைத்தார்.

மின்னணு உற்பத்தியில் நம்நாடு முன்னணி ஏற்றுமதி மையமாக வளர்ந்து வருவதையும் அவர் எடுத்துரைத்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் மருத்துவ கல்லூரிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப கல்லூரிகளின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்திருப்பதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நம் நாட்டின் **UPI** பணபரிவர்த்தனை முறையை தென்னாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகள் பயன்படுத்த முன்வந்துள்ளது குறித்து அவர் பெருமிதம் தெரிவித்துள்ளார்

நாட்டின் முதலாவது இந்தியாவில் தயாரிப்போம் செமி கண்டக்டர் தகடு விரைவில் அறிமுகம் செய்யப்பட இருப்பதாகவும் திரு.அஷ்விணி வைஷ்ணவ் கூறினார்.

❖❖❖❖

<u>மன் கி பாத்</u>

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 120-வது முறையாக வரும் ஞாயிற்றுக் கிழமை உரையாற்றுகிறார்.

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை 1800117800 என்ற இலவச எண், **mygov** இணையதளம், நமோசெயலி உள்ளிட்டவைகளில் நாளைவரை தெரிவிக்கலாம்.

❖❖❖❖

<u>ராம்மோகன் நாயுடு</u>

விமான போக்குவரத்து கட்டணங்களை கட்டுப்படுத்தும் வகையில் விமான எரிபொருளின் மதிப்பு கூட்டு வரியை மாநிலங்கள் குறைக்க வேண்டுமென்று சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனைத் தெரிவித்த அவர், விமான எரிபொருளுக்கான விலை அதிகமாக இருப்பதால்தான் கட்டணங்களும் அதிகமாக உள்ளதாக கூறினார்.

தமிழக அரசு 29 சதவிகித அளவிற்கு மதிப்பு கூட்டு வரியை விமான எரிபொருளுக்கு விதித்திருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தேவையின் அடிப்படையிலேயே கட்டணங்கள் அதிகரிப்பதை சுட்டிக்காட்டியஅவர், மத்திய அரசு அவற்றை நிர்ணயிப்பதில்லை என்றார்

❖❖❖❖

<u>ஜெங்சங்கர்</u>

இலங்கையில் சிறையில் தற்போது 97 இந்திய மீனவர்கள் உள்ளனர் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்

மாநிலங்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனைத் தெரிவித்த அவர், இதில் பெரும்பாலனவர்கள் தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்தவர்கள் என குறிப்பிட்டார்.

இதில் 83 பேர் தண்டனை பெற்றுள்ளதாகவும், 3 பேர் விசாரணை நடவடிக்கைகளில் உள்ளதாகவும், 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதில் பெரும்பாலானோர் ஏற்கனவே கைது நடவடிக்கைகளை சந்தித்தவர்கள் என்பதால் அவர்களை விடுவிப்பது சவாலாக உள்ளதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖

<u>மீனவர்கள்</u>

நெடுந்தீவு அருகே மீன்பிடித்து கொண்டிருந்த ராமேஸ்வரத்தை சேர்ந்த 11 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்ததோடு அவர்களது ஒரு விசைப்படகையும் பறிமுதல் செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

இந்நிலையில் கடந்த பிப்ரவரி மாதம் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட 7 தமிழக மீனவர்கள் இன்றுகாலை சென்னை வந்தடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖

<u>ஆயுஷ்மான் பாரத்</u>

நாட்டில் குழந்தை இறப்பு விகிதங்களை குறைப்பதற்காக மத்திய அரசு மேற்கொண்டுள்ள ஆயுஷ்மான் பாரத் உள்ளிட்ட சுகாதார திட்டங்களை ஐ.நா. வெகுவாக பாராட்டியுள்ளது.

சுகாதார திட்டங்களில் முதலீடுகளை அதிகரித்திருப்பதன் மூலம் லட்சக்கணக்கான இளம் உயிர்கள் பாதுகாக்கப்பட்டிருப்பதாக குழந்தை இறப்பிற்கான ஐ.நா. அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீடு திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு 5 லட்சம் ரூபாய் காப்பீட்டு தொகை வழங்கப்படுவதை சுட்டிக்காட்டியுள்ள ஐ.நா.வின் அறிக்கை, இதன்மூலம் தாய் சேய் நலன் பாதுகாக்கப்படுவதுடன், பரவலாக பல சுகாதார சேவைகள் அளிக்கப்படுவதையும் எடுத்துரைத்தது.

❖❖❖❖

<u>தேயிலை</u>

உலகளவில் 2-வது பெரிய தேயிலை ஏற்றுமதி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

இந்திய தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள தரவுகளின் படி இலங்கையை பின்தங்கி இந்தியா இந்த சாதனையை படைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்றஆண்டு 25 கோடியே 50 லட்சம் கிலோ தேயிலை ஏற்றுமதி செய்து இந்தியா சாதனை படைத்திருப்பதாக தேயிலை வாரியம் கூறியுள்ளது.

தேயிலை ஏற்றுமதியில் தொடர்ந்து கென்யா முதலிடத்தை தக்கவைத்து கொண்டுள்ளது.

புவி அரசியல் தேக்க நிலையிலும், இந்தியா சென்ற ஆண்டு தேயிலை ஏற்றுமதியில் சாதனை படைத்துள்ளதாக இவ்வாரியம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகம், ஈரான், ஈராக், ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளுக்கு, இந்தியா தேயிலை ஏற்றுமதி செய்துவரும் நிலையில் உலகளாவிய ஏற்றுமதியில் இது 10 சதவிகிதமாகும்.

நீலகிரி, அசாம், டார்ஜிலிங் பகுதிகளின் தேயிலை உலகளவில் பிரபலமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖

<u>சட்டப்பேரவை : முதலமைச்சர்</u>

வக்ஃப் சட்டத்திருத்த மசோதாவை முழுமையாக திரும்பப்பெற வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், கொண்டுவந்த தனித்தீர்மானம் சட்டப்பேரவையில் இன்று ஒருமனதாக நிறைவேறியது.

முன்னதாக இத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதலமைச்சர், இந்த புதிய சட்டத்திருத்த மசோதா மூலம் இஸ்லாமிய பெருமக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்டார்.

இதுதொடர்பான வரைவு மசோதா அறிமுகம் செய்யப்பட்ட நிலையிலேயே திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் நாடாளுமன்றத்தில் ஆட்சேபம் தெரிவித்ததாகவும், அதன் விளைவாக இம்மசோதா நாடாளுமன்ற கூட்டுகுழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டதையும் முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற கூட்டுக்குழுவினர் எதிர்கட்சியினரின் ஆட்சேபத்தை கருத்தில் கொள்ளாததால் இந்த சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கலாகும் சூழல் இருப்பதை முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனவே தாம் முன்மொழிந்த இந்த தீர்மானத்தை அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அஇஅதிமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் இந்த தனித்தீர்மானத்தை வரவேற்று பேசியதை அடுத்து இத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

❖❖❖❖

<u>பி.ஜே.பி. வெளிநடப்பு</u>

இதனிடையே இந்த தனித்தீர்மானத்தை எதிர்த்து பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் இன்று அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

அனைவரையும் கலந்தாலோசித்து கொண்டுவரப் பட்டுள்ள வக்ஃப் திருத்த மசோதாவை திரும்பப்பெற வேண்டுமென்று வலியுறுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியா என்று கூறி அக்கட்சி உறுப்பினர் திருமதி. வானதி ஸ்ரீநிவாசன் உட்பட பி.ஜே.பி. உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.

❖❖❖❖

உதயநிதி ஸ்டாலின்

தேசிய மாணவர் படை மாணாக்கரின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் திருச்சி ஓலையூரில் நிரந்தர பயிற்சி முகாம் அமைக்கப்படும் என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று வெளியான தமது துறைகளின் கொள்கை விளக்க குறிப்பில் இதனைத் தெரிவித்துள்ள அவர், 3 சகவிகித விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் 84 விளையாட்டு வீரர்கள் அரசு மற்றும் பொது துறைகளில் பணி அமர்த்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

விளையாட்டு வீரர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த பல்வேறு முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

நேரு யுவகேந்திரா அமைப்பு 30 மாவட்டங்களில் செயல்படுவதாக கூறிய அவர், அனைத்து கிராமங்களிலும் இளைஞர் மன்றங்கள் உருவாக்கப்படும் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

❖❖❖❖

சட்டப்பேரவை : எ.வ.வேலு

கன்னியாகுமரி மாவட்டம் இரவி புதூர்கடை முதல் கருங்கல் வரையுள்ள சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருவதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு கூறினார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனைத் தெரிவித்த அவர், இதேபோல் ஓசூர் - தளி கண்டமங்கலம் - ஆரணி, விக்ரவாண்டி - கும்பகோணம் இரணியல் - திங்கள்நகர் சாலை மேம்பாட்டு பணிகளும் படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்றார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது வெளியான மேலும் சில தகவல்கள் :

தமிழ்நாட்டில் நகராட்சி பேரூராட்சி பகுதிகளில் இடவசதிக்கு ஏற்ப பூங்காக்கள் விரைவில் அமைக்கப்படும் என்றும் மாநில நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.**K.N.**நேரு தெரிவித்துள்ளார்.

..

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம், தொகுதிக்கு உட்பட்ட இடங்களில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் கட்ட எந்த தடையும் இல்லை என்று மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. **K.R.** பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் முழுநேர நியாயவிலை கடைகள் மட்டுமே கட்ட அனுமதி வழங்கப்பட்டு உள்ளதாகவும் அவர் கூறினார்.

..

சென்னிமலை அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலின் அருகே தியாகி திருப்பூர் குமரனுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்றும் அதற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்றும் மாநில செய்தித்துறை

அமைச்சர்
திரு. மு.பெ.சாமிநாதன் தெரிவித்துள்ளார்

மாவட்ட அளவிலான பத்திரிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைகள் ரத்து தொடர்பான விஷயத்தில் விரைவில் முடிவு எட்டப்படும் என்றார்

..

சென்னையில் புதைவட மின்கம்பிகள் அமைக்கும் பணிகள், குறித்த காலத்திற்குள் முடிக்கப்படும் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு. செந்தில்பாலாஜி கூறியுள்ளார்.

மயிலம் தொகுதிக்கு உட்பட்ட வல்லம் பகுதியில் 5 கோடியே 26 லட்சம் ரூபாய் செலவில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணி இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும் என்றார்.

❖❖❖❖

<u>வேலை நிறுத்தம்</u>

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள ஒப்பந்த விதிமுறைகளை தளர்த்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தென்மண்டல எல்.பி.ஜி டேங்கர் லாரி வேலைநிறுத்தம் நாமக்கல்லில் தற்போது நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖

<u>தென்காசி வாய்ஸ்</u>

தென்காசி மாவட்டம் பாவூர் சத்திரம் கால்நடை சந்தையில் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு 2 கோடி ரூபாய்க்கும் மேல் விற்பனை நடைபெற்றதால் வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖

## <u>FIBA</u>

சிங்கப்பூரில் நடைபெறும் **FIBA** ஆசியகோப்பை ஆடவர் கூடைப்பந்து தகுதிச்சுற்று இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பிலிப்பைன்ஸை எதிர்கொள்கிறது.

இதில் வெற்றிபெறும் அணி முதன்மை சுற்றுகளுக்கு தேர்வாகும்.

❖❖❖❖

<u>ஸ்குவாஷ்</u>

மும்பையில் நடைபெறும் இந்தியன் ஓப்பன் ஸ்குவாஷ் மகளிர் அரையிறுதியில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா - அனாஹத் சிங்கை இன்று எதிர்கொள்கிறார்.

ஆடவர் அரையிறுதியில் இந்தியாவின் அபய்சிங் - எகிப்தின் கரீம் உடன் மோதுகிறார்.

❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத்தில் இன்றிரவு ஏழரை மணிக்கு சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - லக்னோ சூப்பர் ஜெயன்ஸை எதிர்கொள்கிறது

❖❖❖❖